DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : மாடசாமி (Pw.23)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் ரெகுநாதமடையில் குடியிருந்து வருகிறேன். நான் நிமிந்தாள் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13 வருடத்திற்கு முன்பு நானும் எனது மனைவி தெய்வசிகாமணியும் அருப்புக்கோட்டை சென்று ஸ்கேன் எடுத்துவிட்டு ஊருக்கு வருவதற்காக நத்தகுளம் செல்லும் அரசு பேருந்தில் பகல் 3.10 மணியளவில் அருப்புக்கோட்டையில் ஏறினோம். நானும், எனது மனைவியும் நடத்துநர் சீட்டுக்கு பின்னால் உள்ள இருக்கையில் உட்கார்ந்திருந்தோம். பனையூருக்கும் மேற்கே, சோலாருக்கும் அருகே

பகல் 3.45மணியளவில் சென்றபோது கிழக்கில் இருந்து மேற்காக வந்த டிப்பர் லாரி வேகமாக வந்து பேருந்தில் மோதிவிட்டது. அதனால் எனக்கு வலது இடுப்பில் இருந்து கால் வரை கியர் போடும் பாக்ஸ்ற்குள் சென்றுவிட்டது. அதனால் எனக்கு பலத்த காயம் ஏற்பட்டது. நான்மயக்கம் அடைந்துவிட்டேன். திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அதன்பின்பு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. போலிசார் எனக்கு அருகே உள்ளவர்களிடம் விசாரணை செய்தார்கள். நான் மயக்கநிலையில் இருந்தேன்.

**எ.த.கு.வி –**

விபத்திற்கு பேருந்து ஓட்டுநரும் காரணம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ஆறுமுகம் (Pw.22)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் ஆணைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பூசாரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13 வருடத்திற்கு முன்பு அருப்புக்கோட்டை சென்றுவிட்டு ஊருக்கு வருவதற்காக நத்தகுளம் செல்லும் அரசு பேருந்தில் பகல் 3.10 மணியளவில் அருப்புக்கோட்டையில் ஏறினேன். பனையூருக்கும் மேற்கே, டவருக்கும் கிழக்கே பகல் 3.45மணியளவில் சென்றபோது கிழக்கில் இருந்து மேற்காக வந்த டிப்பர் லாரி வேகமாக வந்துபேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் எனக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. என்னுடன்

பேருந்தில் வந்த 50 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. நான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 2 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். மற்ற நபர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் சென்ற பேருந்தின் நடத்துநர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மறு நாள் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

நடத்துநர் எப்படி விழுந்தார் என்றும் எப்போதுஇறந்தார் என்று 2 நாட்கள் கழித்து தெரியும் என்றால் சரிதான். சத்தம் கேட்டபின்புதான் விபத்து பற்றி தெரியும் என்றால்சரிதான். விபத்திற்கு முழுக்காரணம் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியின் கவனக்குறைவினால் விபத்து நடக்கவில்லை என்றாலும் என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : **ராமன் (Pw.21)**

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் குழலிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13 வருடத்திற்கு முன்பு திருச்சுழிக்கு சாமான்கள் வாங்குவதற்கு வந்துவிட்டு எனது ஊருக்கு செல்வதற்காக நத்தகுளம் செல்லும் அரசு பேருந்தில் பகல் 3.40 மணியளவில் ஏறினேன். என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த சுப்பையா என்பவர் வந்தார். சோலாருக்கும், பனையூருக்கும் இடையே சுமார் 3.50மணியளவில் மேற்கில் இருந்து கிழக்காக இடது ஓரமாக நாங்கள் சென்ற அரசு பேருந்தின் மீது கிழக்கில் இருந்து மேற்காக வந்த டிப்பர் லாரி

வேகமாக வந்துபேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் எனக்கு பல் உடைந்துவிட்டது. அதனால் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. என்னுடன்பேருந்தில் வந்த 10, 15 நபர்களுக்கு காயம் ஏற்பட்டதாக மறு நாள் கேள்விபட்டேன். நான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 2 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். மற்ற நபர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தார்கள். நான் சென்ற பேருந்தின் நடத்துநர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்த நபர் ஆவார். விபத்தை ஏற்படுத்தியவுடன் இறங்கி ஓடிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

பேருந்தும் லாரியும் நேருக்கு நேர் மோதியவுடன் அவற்றை பிரித்து எடுக்க 3 மணி நேரம் ஆனது என்றால் சரிதான். அந்த நேரத்தில் அந்த சாலையில் இடது புறமாகதான் வாகனங்கள் சென்று வந்தன என்றால் நான் அரசு மருத்துவமனையில் இருந்ததால் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கும்போது நடத்துநர் கண்ணாடி உடைந்து நடு ரோட்டில் விழுந்துகிடந்தார் என்றால் கண்ணாடிஉடைந்து வட பக்கம் விழுந்திருந்தார். அதன்பின்னர் நான் மயங்கிவிட்டதால் எனக்கு தெரியாது. நான் பேருந்தில் இடதுபக்கம் முன்னால் இருந்து 6 இருக்கைகள் தள்ளி இருந்தேன். சத்தம் கேட்டு காயம் ஏற்பட்ட பின்புதான் விபத்து பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்னர் எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் வாகனம் இடது பக்கம் வந்தது, டிப்பர் லாரி நேராக வந்து மோதியதை நான் பார்த்தேன். விபத்திற்கு காரணம் அரசு

பேருந்து டிரைவர் தான் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : **கார்மேகம் (Pw.20)**

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் ஆணைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பூசாரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13 வருடத்திற்கு முன்பு ஒரு விசேசத்திற்கு சென்று விட்டு அருப்புக்கோட்டையில் நத்தகுளம் செல்லும் அரசு பேருந்தில் பகல் 3மணியளவில் ஏறினேன். திருச்சுழிக்கும் பனையூருக்கும் இடையே பேருந்து சென்று கொண்டிருந்தபோது சுமார் 3.30மணியளவில் கிழக்கில் இருந்து மேற்காக வந்த லாரி நான் சென்ற பேருந்தின் மீது மோதிவிட்டது. அதனால் எனக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. நான் திருச்சுழி அரசு

மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 2 நாட்கள் சிகிச்சை முடிந்து அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். நான் சென்ற பேருந்தின் நடத்துநர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

மொத்தம் எத்தனை நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்திற்கு யார் காரணம் என்று என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பையா (Pw.19) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் குழலிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2013ம் வருடம் வேலைக்குச் சென்றுவிட்டு ஊருக்கு செல்வதற்காக திருச்சுழிக்கு பகல் 3மணிக்கு வந்தேன். அருப்புக்கோட்டையில் இருந்து நத்தகுளம் செல்லும் பேருந்து திருச்சுழிக்கு 3.10மணிக்கு வந்தது. அந்த அரசு பேருந்தில் நான் ஏறி சென்றேன். நான் சென்ற பேருந்தில் காத்தம்பட்டி, ஆனைகுளம், அம்மன்பட்டி, குழலிகுளம் கிராமத்தைச் சேர்ந்த மொத்தம் சுமார் 42 நபர்கள் பேருந்தில் சென்றோம். பனையூருக்கும்

மேற்கு பக்கம் அருகில் உள்ள தோட்டம் அருகே சுமார் 3.45 மணிக்கு சென்றபோது அரசு பேருந்து இடது புறம் சென்றது. டிப்பர் லாரி எதிரே வேகமாக வந்து நாங்கள் சென்ற இடது பக்கம் வந்து அரசு பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. பேருந்தில் முன்பக்கமாக டிக்கெட் கொடுத்து கொண்டிருந்த பேருந்தின் நடத்துநர் பேருந்தின் முன் பக்க கண்ணாடி உடைந்து நடத்துநர் பேருந்தின் முன்பக்கமாக விழுந்துவிட்டார். நான் பேருந்தை விட்டு கீழே இறங்கி நடத்துநரை தூக்கியபோது நான் பிழைக்கமாட்டேன் என்னை தூக்க வேண்டாம் என்று சொன்னார்.

2. எனக்கு இரண்டு முட்டுகளிலும் காயம் ஏற்பட்டது. பேருந்தில் சென்ற சுமார் 30 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அதில் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். சிறிய காயம் அடைந்தவர்களை திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். பெரிய காயம் ஏற்பட்டவர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து ஒரு சிலரை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆஜர் எதிரிதான். அவர் விபத்து ஏற்படுத்தியவுடன் அடித்துவிடுவார்கள் என்று பயந்து ஓடி காவல் நிலையத்தில் ஆஜர் ஆகிவிட்டார். நான் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி :–**

அரசு பேருந்தின் நடத்துநர் முன் பக்க கண்ணாடி உடைந்து ரோட்டின் எந்த பகுதியில் விழுந்து கிடந்தார் என்றால் ரோட்டின் இடது புறத்தில் விழுந்து கிடந்தார். லாரிக்கும் வடக்கு பக்கம் விழுந்தாரா என்றால் பேருந்திற்கு முன்னால் இடது புறம் விழுந்தார். பேருந்தும், லாரியும் நேருக்கு நேராக மோதி இருந்தால் பேருந்தில் இருந்த நடத்துநர் லாரிக்குள் தான் விழுந்திருப்பார் என்றால் டிரைவர் பக்கம் தான் லாரி

மோதியது. லாரியையும், பேருந்தையும் எடுப்பதற்கு எடுக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு நாள் ஆனது. விபத்திற்கு பின்னால் வந்த வாகனங்கள் அனைத்தும் வடக்கு பக்கம் சென்று வந்தது என்றால் இல்லை, இரண்டு வாகனங்கள் எடுத்தால்தான் வாகனம் செல்ல இயலும். வாகனங்கள் அனைத்தும் கிழ மேல் ரோட்டில் வடக்கு பக்கம் தான் சென்றது என்றால் சரியல்ல.

2. நான் சொன்னதுபோல் நேருக்கு நேர் மோதியிருந்தால் லாரிக்குள் நடத்துநர் விழுந்திருப்பார் என்றால் சரியல்ல. லாரி ரோட்டிற்கு தெற்கு பக்கமாக வந்ததால்தான் நடத்துநர் ரோட்டில் விழுந்தார் என்றால் சரியல்ல. நான் சென்ற பேருந்தின் ஓட்டுநர்தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு ஏற்பட்ட காயத்தை மிகைப்படுத்தி இரண்டு கால்களிலும் ஏற்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.